வானங்களில்
உள்ளவைகளே
Praise the Lord
from the Heavens
Album 36 Song 5

Song 5 வானங்களில் உள்ளவைகளே 148 சங்கீதம்

Psalm 148 summons everything — angels, sun, moon, stars, heavens, mountains, animals, kings, and people — to praise the exalted name of the Lord, whose glory is above all.

வானங்களில் உள்ளவைகளே கர்த்தரைத் துதியுங்கள்
உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்
பூமியில் உள்ளவைகளே கர்த்தரைத் துதியுங்கள்
அவருடைய நாமத்தைமாத்திரம் உயர்த்தித் துதியுங்கள்

வானங்களில் உள்ளவைகளே கர்த்தரைத் துதியுங்கள்
உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்
பூமியில் உள்ளவைகளே கர்த்தரைத் துதியுங்கள்
அவருடைய நாமத்தைமாத்திரம் உயர்த்தித் துதியுங்கள்

கர்த்தரின் தூதர்களே கர்த்தரின் சேனைகளே
நீங்கள் யாவரும் கர்த்தரைத் துதியுங்கள்
சூரிய சந்திரரே சகல நட்சத்திரங்களே
நீங்கள் கர்த்தரைப் போற்றித் துதியுங்கள்

வானாதி வானங்களே, ஆகாய மண்டலமே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்
ஆகாயத்தின் மேலுள்ள தண்ணீர்களே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்

Remnant Tamil Worship

மகா மச்சங்களே சகல ஆழங்களே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்

உறைந்தமழையே மூடுபனியே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்
பெருங்காற்றே தென்றல் காற்றே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்

மலைகளே சகல மேடுகளே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்
கனிதரும் மரங்களே கேதுரு மரங்களே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்

காட்டு மிருகங்களே நாட்டு மிருகங்களே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்
ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்

பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்
பிரபுக்களே பூமியின் நியாயாதிபதிகளே
கர்த்தரையேப் போற்றித் துதியுங்கள்

வாலிபரே கன்னிகைகளே

Remnant Tamil Worship

கர்த்தரையேப் போற்றி துதியுங்கள்
முதிர்வயதுள்ளவர்களே பிள்ளைகளே
கர்த்தரையேப் போற்றி துதியுங்கள்

கர்த்தரின் நாமம் மாத்திரம் உயர்ந்ததே
கர்த்தரின் மகிமை மேலானது
தம்முடைய ஜனத்திற்கு கொண்டாட்டமாக
ஒரு கொம்பைக் கர்த்தர் உயர்த்தினாரே

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
ராஜாவைக் கொண்டாடுங்கள்
இயேசுவையே மகிமை படுத்துங்கள்

அல்லேலூயா அல்லேலுயா
அல்லேலூயா அல்லேலுயா
அல்லேலூயா அல்லேலுயா
அல்லேலூயா அல்லேலுயா

Remnant Tamil Worship